மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) விவரங்களடங்கிய அறிக்கை @ பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

* 322 வினா—**திரு. மே. சி. தூயமணி** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி ஒன்றை அமைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது மேட்டுப் பாளையத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி துவக்கும் குறிப்பு ஏதும் அரசு பரிசீலனையில் இல்லை.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, மேட்டுப்பாளையத்தில் ஏராளமான பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படிக்க விடுதி இல்லை. அவர்கள் மனக்குறையைப் போக்கும் வகையில் அவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது அப்படிப் பட்ட பரிசீலனை இல்லை. நிதிநிலை வசதி ஏற்படும்போது மாண்பு மிகு உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்படும்.

தாமிரவருணி ஆற்றின் குறுக்கே பாலம்

* 323 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-69-ம் ஆண்டில் தென் திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் முக்கூடல் வீரவநல்லூர் கிராமங்களை இணைக்க தாமிரவருணி நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டவும் மேற்படித் திட்டத்தினைத் திட்ட வேலையில் சேர்ப்பதற்கும் அரசின ருக்குச் சிபாரிசு செய்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் யாவை?

@ 601–503-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.